## தமிழ் இணையக் கல்விக்கழகம்
## சென்னை – 600 025.

### இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
### இரண்டாம் பருவம்

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2021**

## P102 உரைநடையும் நாடகமும்

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் கூறும் வேறு பெயர் என்ன?
2. மணிப்பிரவாள நடை என்றால் என்ன?
3. திரு.வி.க. தமிழாக்கம் செய்த சொற்களுள் இரண்டினைக் குறிப்பிடுக.
4. பேரறிஞர் அண்ணாவின் நாடகங்களுள் இரண்டினைக் குறிப்பிடுக.
5. கண்ணாதாசனின் உரைநடையில் உள்ள தனித்தன்மைகளுள் இரண்டினைக் கூறுக.
6. கோவி. மணிசேகரனின் உரைநடை வகையுள் இரண்டினைக் குறிப்பிடுக.
7. கவலைக்கு மருந்தாகப் பாரதியார் குறிப்பிடுவது எது?
8. பழந்தமிழ் நூல்களில் குறிப்பிடப்படும் நாடக நூல்கள் யாவை?
9. பம்மல் சம்பந்த முதலியார் நிறுவிய நாடக மன்றத்தின் பெயர் என்ன?
10. மதுவிலக்கு விழிப்புணர்வுக்காகப் பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய நாடகத்தின் பெயர் என்ன?
11. சோழர்கள் வரலாற்றை எடுத்துரைக்கும் நாடகங்கள் யாவை?
12. நாடகமாக ஆக்கப்பட்ட கல்கியின் வரலாற்றுப் புதினம் எது?
13. தொலைக்காட்சி நாடகமாக்கப்பட்ட இரண்டு புதினங்கள் யாவை?
14. சாகித்திய அகாதமி விருது பெற்ற பாரதிதாசனின் படைப்பு எது?
15. இசை நாடகங்களுள் இரண்டினைக் குறிப்பிடுக.

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. இளம்பூரணரின் உரைச் சிறப்புகளை இயம்புக.
2. திரு.வி,க. வின் இதழியல் நடை குறித்து விவரிக்க.
3. பாவாணர் சொல்லாக்கத்தில் ஈடுபட்டதற்கானக் காரணங்களைக் கூறுக.
4. மு.வ.வின் திருக்குறள் உரை வெகுமக்களை ஈர்த்ததற்கான காரணங்களை எழுதுக.
5. சங்கரதாசு சுவாமிகள் தமிழ்நாடக வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை விளம்புக.
6. இசுலாமிய நாடகங்கள் –குறிப்பு வரைக.
7. கலைஞர் கருணாநிதியின் நாடகங்களைப் பற்றி இயம்புக.
8. ஈழத்தின் தெருக்கூத்து கலை – குறிப்பு வரைக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) உரைநடையின் தோற்றம், சங்க கால உரைநடை ஆகியவற்றைப் பற்றி விளக்கியுரைக்க

   (அல்லது)

   (ஆ) தமிழ் உரைநடை வளர்ச்சிக்குத் தனித்தமிழ் இயக்கம் ஆற்றியப் பணிகளை விவரித்துரைக்க.

2. (அ) திராவிட இயக்க நாடகங்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

   (அல்லது)

   (ஆ) தமிழில் உரைநடை வளர்ச்சிக்குப் பேரறிஞர் அண்ணா ஆற்றிய பணிகளை எடுத்துரைக்க.

3. (அ) வானொலி நாடகங்கள் குறித்து விவரித்துரைக்க

   (அல்லது)

   (ஆ) தொலைக்காட்சி நாடகங்களும் தமிழ்ச்சமூகமும் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

* * *